# சமாதானக் கல்வி எனும் எண்ணக்கருவும் தற்காலத்தில் அதன் அவசியப்பாடும்.

M. I. F. Afra[1], M.I. Fathima Sheefa[2]

[1&2]Department of Islamic Studies. [1&2]Faculty of Islamic Studies and Arabic Language. South Eastern University of Sri Lanka.

ibraheemsheef@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** சமாதானக் கல்வி என்பது நாம் சிந்திக்கின்ற தன்மையை மாற்றுவதோடு சமாதனம் நீதி போன்றவற்றுக்கான கற்கைகளை ஊக்குவிக்கின்ற ஒரு பங்குபற்றுதலுடனான நடைமுறையாகும். சமாதானத்தை உருவாக்குவதற்கும், அதனைக் கட்டியெழுப்புவதற்கும், பாதுகாப்பதற்கும் மக்களுக்கு ஆற்றல்கள், சக்திகள் தேவைப்படுகின்றன. அவர்களுக்குத் தேவையான சக்தி, ஆற்றல் போன்றவற்றை மனித உரிமைகள், அபிவிருத்தி, ஜனநாயகம், சுற்றுச் சூழல், மோதல் தீர்வு, ஆமாதலுக்கான காரணிகளை கண்டறிதல், பகுப்பாய்வு செய்தல், அவற்றை தீர்த்தல், சமாதானம் பற்றியும் அதனை உருவாக்குதல், கட்டியெழுப்புதல், பாதுகாத்தல் போன்ற இன்னோரன்ன எண்ணக்கருக்களை கல்வியூடாக பெற்றுக் கொடுப்பதே கமாதானக் கல்வியின் நோக்கமாகும். மனிதப் பாதுகாப்பு, ஆயுதத் தவிர்ப்பு பற்றிய விடயங்கள், இணக்கப்பாடு, முரண்பாட்டுத் தவிர்ப்பு, தொடர்பூடகம் பற்றிய விமர்சன ரீதியான புரிந்துணர்வு, ஆண்,பெண் இருபாலர் கற்கைகள். ஆகிம்சை, சர்வதேச உறவுகள் போன்ற எல்லாம் சமாதானக் கல்வியின் அங்கங்களாகும். சமூகப்பிராணியாகிய மனிதன் தன்னால் தனித்து வாழ முடியாததனால் பிறருடன் இணைந்தே தனது அன்றாட வாழ்க்கையை கடத்திச் செல்கின்றான். இதன்பொழுது, பல்வேறு பட்ட உள்ளக மற்றும் வெளியகக் காரணிகளால் தங்களுக்குள் வெவ்வேறு விதங்களில் முரண்பாடுகளுக்குள் அகப்பட நேர்கின்றது. இது தனி நபர்களுக்கிடையில் என்று ஆரம்பித்து குடும்பம், குழுக்கள், வேலைத் தளங்கள், பிரதேசங்கள், நாடுகள் என்றளவு நீட்சியடைகின்றன. அந்நிலையில் அமைதியான சிறந்த வாழ்க்கை வாழ வேண்டுமாயின் அதற்கு மிக அத்தியாவசியமாக காணப்படுவது சமாதானம் ஆகும். இது தொடர்பான கல்வி மற்றும் அதன் அவசியங்கள் தொடர்பில் தெளிவின்மையால் இன்று சமாதானம் என்பது வெறும் ஏட்டுச் சுரக்காய் போலவே உள்ளது. இது ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் தொடராக சமாதானக் கல்வி என்பதன் மூலம் நாடப்படுவது என்ன? தற்காலத்தில் சமாதானக் கல்வி ஏன் அவசியப்படுகின்றது? போன்ற பல கேள்விகளுக்கு பதில் கண்டுபிடிக்க வேண்டிய கடப்பாடு இன்று எழுந்துள்ளது. இதனால் தான் இவ் ஆய்வானது சமாதானக் கல்வி எனும் எண்ணக்கருவை விளக்குதல் மற்றும் தற்காலத்தில் சமாதானக் கல்வியின் அவசியப்பாட்டை தெளிவுபடுத்துதல் ஆகிய நோக்கங்களை தன்னகத்தே கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பண்புரீதியான ஆய்வாகும். இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளாக இத் தலைப்புத் தொடர்பான நூல்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமானங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையதளம் என்பன மீழாய்வுக்குட்படுத்தப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** மோதல், யுத்தம், சமாதானம், சமாதானக் கற்கை

## ஆய்வு அறிமுகம்

பல்லின, பல மத, பல் கலாசார மக்கள் வாழக் கூடிய இடங்களில் எல்லாம் தவறாமல் தேடப்படும் ஒரு அம்சம் என்றால் அது சமாதானத்தோடு இணைந்ததாகவே அமைகின்றது. யுத்தங்கள் மனிதர்களின் மனங்களிலிருந்து ஆரம்பிப்பதினால் சமாதானத்துக்கான பாதுகாப்புகளும் அந்த மனிதர்களின் மனங்களிலிருத்தே கட்டியெழுப்பப்பட வேண்டும் (யுனெஸ்கோ யாப்பு முகவுரை). மனிதர்களின் வரலாறு மரணங்களும் அழிவுகளும் மழிந்த யுத்தங்களினால் உருவாக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டதொன்றாகும். கடந்த 5600 வருட மனித வரலாற்றில் 14,500 யுத்தங்கள் நடைபெற்றுள்ளதாக ஒரு ஆய்வுக் கணிப்புக் கூறுகிறது, கடந்த 3400 வருட வரலாற்றில் 286 வருடங்கள் மட்டுமே தான் சமாதானமான வருடங்களாக இருந்தது என மற்றுமொரு ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது (ஜோதியலிங்கம்). அதிலும் 2ம் நூற்றாண்டு மிகவும் பேரழிவை ஏற்படுத்தியதொன்றாகும். மனித வாழ்வில் மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட இரு உலக மகா யுத்தங்கள் உட்பட பல ஆயுத முரண்பாடுகளினால் பல இலட்சக்கணக்கானவர்களின் உயிர்கள் பலி போயின. இந்த யுத்த அழிவு தான் உலகில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் இவ்வகையான அழிவுகளிலிருந்து மனித சமூகத்தைப் பாதுகாக்க முடியும் என்ற நிலைப்பாட்டை, இரண்டாம் உலக மகா யுத்தத்தை முன்னின்று நடத்திய யுத்த அதிபதிகளுக்கு ஏற்படுத்தியது.

இப்புரிந்துணர்வின் விளைவுதான் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உருவாக்கமாகும். ஐக்கிய நாடுகள் அமைப்பை உருவாக்கியவர்கள் தமது இந்தக் கடமைப்பாட்டை 1945ஆம் ஆண்டு வெளியிட்ட ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள். "……. ஐக்கிய நாடுகளின் மக்களாகிய நாங்கள் எதிர்காலத் தலைமுறையினரை யுத்தக் கொடூரங்களிலிருந்து பாதுகாக்க திடசந்தர்ப்பம் கொண்டுள்ளோம்." இரண்டாம் உலக மகா யுத்தம் முடிவடைந்த சில வருடங்களில் யுத்தக் குற்றவாளிகள் தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மனித உரிமைகள் பற்றிய உலகப்பிரகடனம் வெளியிடப்பட்டமையானது யுத்தத்தின் அழிவுகளையும் விபரீதங்களையும் எதிர்காலத்தில் இல்லாதொழிக்க வேண்டியதன் தேவையை எடுத்துக்காட்டிய ஒரு முக்கிய நிகழ்வாகும். மனிதத்துவத்தின் சமாதானமானதும், நீதியானதுமான கலாசாரத்தைத் தோற்றுவிக்கும் ஒரு புதிய யுகத்தின் ஆரம்பமாகவே மக்கள் இந்நிகழ்வை இனம் கண்டனர்.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் தாபனம் உருவாக்கப்பட்டதன் பின் 220 இலட்சம் மக்கள் பல்வேறு யுத்தங்களினால் கொல்லப்பட்டதாக கணிப்பிடப்பட்டுள்ளது (ஜோதியலிங்கம்). இவர்களில் பெருந்தொகையானோர் அப்பாவி பொதுமக்களாவர். இரண்டாம் உலக மகா யத்தத்திற்குப் பின் ஒரு நாட்டை மற்றொரு நாடு ஆக்கிரமிக்கும் செயற்பாடு மிகவும் அரிதாகவே செயற்பட்டுள்ளது. ஆனால் இன, மத, மொழி, மற்றும், கலாசார தனித்துவங்களையும் வேறுபாடுகளையும் அடிப்படையாகக் கொண்ட முரண்பாடுகள் அதிகரித்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தனித்துவ அடையாளங்களை

அடிப்படையாகக் கொண்ட உள்நாட்டு ஆயுத முரண்பாடுகளாகும். மனித இனத்தின் பரிணாமம், மரபணுக்கள், மிருக நடத்தைகள், மூளை பற்றிய ஆய்வுகள், சமூக மனோ தத்துவவியல் போன்ற துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மனித இனம் உயிரியல் காரணிகளால் யுத்தத்தையும் வன்முறையையும் நாடுவதில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

தற்போது சமாதானத்தைக் கற்பித்தல், கல்விப் புனரமைப்பொன்றாக பல நாட்டுக் கல்வியமைப்பிலும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது. பிள்ளைகள் சமாதானமான நபர்களாக வளரச்சி பெற அவசியமான அடிப்படை அறிவு, மனப்பாங்குகள், திறன்கள் ஆகியவற்றை அபரிவிதமாக வழங்கும் வனப்பான கற்றல் செயற்பாடுகள் தேவைப்படுகின்றது. கல்வியின் குறிக்கோளாவது நற்பிரஜையை அல்லது பூரணமான மனிதன் ஒருவனை உருவாக்குதலே ஆகும். எனவே பிள்ளைகள் சமாதானமாக வாழும் முறையைக் கற்பித்தலும் கட்டாயமான விடயமாகும். உண்மையாகப் புராதனம் தொட்டே நாகரீகம் அடைந்திருந்த பல நாடுகளின் சாரமாக சமாதானம் கைக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. இன்றைய உலகில் கல்வியிலே முன்னணி வகிக்கும் பல நாடுகள் மாணவர்களுக்குக் சமாதானம் கற்பித்தலில் விஷேட ஊக்கத்துடன் செயற்படுகின்றன. ஒரு நாட்டினது சமாதானம் பெறுமதி வாய்ந்தது. அங்கு சமதாதனத்துக்கு ஊறு விளைவிக்கப்படுமாயின் அதனால் ஏற்படத் தக்க தாக்கம் மிகப் பெரிய அளவாக அமையலாம். எனவே, சமாதானத்தைத் தோற்றுவிக்கும் பொருட்டு அரசியல், பொருளியல், சமூகப்புணரமைப்பு போன்ற பல்வேறு துறைகளைப் போலவே கல்வியும் இடையறாது முயற்சிப்பது அவசியமாகும் (பாலசூரிய, 1995). நாம் பாடசாலையிலே சமாதானத்தை கற்பிக்காதுவிடின் பிள்ளைகள் அயற் சமூகத்தில் தாம் காண்பன மற்றும் கேட்பன ஊடாக இம்சையைக் கற்றுக் கொள்ளக் கூடும். இதன் பெறுபேறாக நாம் வாழும் சமூகத்தில் இம்சையானது பல்வேறு தோற்றங்களாக துரிதமாகத் தலையெடுக்கும். அவ்வாறு அமையுமிடத்து சமூகமானது மக்கள் வாழத் தகாத இடமாக அவல நிலை தோன்றாது என்பதற்கில்லை.

எதிர்கால மானிட சமூகத்தில் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கல்வியும் ஏதோவொரு அடிப்படைப்பணியை ஆற்றவேண்டும் என்பதனை ஏற்கத்தான் வேண்டும். உண்மையாகவே பல நாடுகளின் கல்வியாளர்களும், ஆசிரியர்களும், இதனைப் புரிந்து கொண்டுள்ளார்கள். அண்மைக்காலந்தொட்டு சமாதானக் கல்வி தொடர்பாக எழுதப்பப்பட்ட புத்தகங்கள், நடாத்தப்படும் ஆய்வுகள், ஆசிரியப் பயிற்சிப் பாடநெறிகள் என்பன இதனை உறுதிப்படுத்துகின்றன.

**ஆய்வு பிரச்சினை**

சமூகப்பிராணியாகிய மனிதன் தன்னால் தனித்து வாழ முடியாததனால் பிறருடன் இணைந்தே தனது அன்றாட வாழ்க்கையை கடத்திச் செல்கின்றான். இதன்பொழுது, பல்வேறு பட்ட உள்ளக மற்றும் வெளியகக் காரணிகளால் தங்களுக்குள் வெவ்வேறு விதங்களில் முரண்பாடுகளுக்குள் அகப்பட நேர்கின்றது. இது தனி நபர்களுக்கிடையில் என்று ஆரம்பித்து குடும்பம், குழுக்கள், வேலைத் தளங்கள், பிரதேசங்கள், நாடுகள் என்றளவு நீட்சியடைகின்றன. அந்நிலையில் அமைதியான சிறந்த வாழ்க்கை வாழ வேண்டுமாயின்

அதற்கு மிக அத்தியாவசியமாக காணப்படுவது சமாதானம் ஆகும். இது தொடர்பான கல்வி மற்றும் அதன் அவசியங்கள் தொடர்பில் தெளிவின்மையால் இன்று சமாதானம் என்பது வெறும் ஏட்டுச் சுரக்காய் போலவே உள்ளது. இது ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு நோக்கங்கள்**

- சமாதானக் கல்வி எனும் எண்ணக்கருவை விளக்குதல்.
- தற்காலத்தில் சமாதானக் கல்வியின் அவசியப்பாட்டை தெளிவுபடுத்துதல்.

**ஆய்வு வினாக்கள்**

- சமாதானக் கல்வி என்பதன் மூலம் நாடப்படுவது என்ன?
- தற்காலத்தில் சமாதானக் கல்வி ஏன் அவசியப்படுகின்றது?

**ஆய்வு முறையியல்**

இது பண்புரீதியான ஆய்வாகும். இவ் ஆய்வில் இரண்டாம் நிலைத் தரவுகளாக இத் தலைப்புத் தொடர்பான நூல்கள், ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆய்வுகளின் உட்பரிமானங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையதளம் என்பன மீழாய்வுக்குட்படுத்தப்பட்டு இவ் ஆய்வு விபரண விபரிப்புமுறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**இலக்கியமீலாய்வு**

இவ்வாய்வினை சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கு பல்வேறு இலக்கியமீலாய்வுகள்மீளாய்வுக்குட்படுத்தப்பட்டன. அதில் மிக முக்கியமான இலக்கியமீளாய்வுகளை இங்கு குறிப்பிடுகிறோம். அந்த வகையில் பாலசூரிய, ஏ. (1995). *சமாதானக் கல்வி கற்றற் செயற்பாடுகள் (இடைநிலை வகுப்பு மாணவர்களுக்காக)* என்ற புத்தகமானது சமாதக்கல்வி என்றால் என்ன? அதனை எவ்வாறு இடைநிலை மாணவர்கள் மத்தியில் கொண்டு செல்வது, மேலும் அவர்களுக்கு வழங்கக்கூயெ பயிற்சிகள் என்பன விபரிக்கப்பட்டுள்ளது. மேலும் ஹீஸைன், ஏ. (2020) என்ற தொகுப்பாசிரியர் தமது *VTN NEWS* எனும் இணையத்தள பத்திரிகையில் சமாதானத்திற்கான இணக்க மையங்கள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார். அதே போன்று ஜோதியலிங்கம், எஸ். (-). எழுதிய *யுத்தக் கலாசாரத்திலிருந்து சமாதானக் கலாசாரத்தை நோக்கி* எனும் புத்தகமானது சமாதனக்கல்வி என்றால் என்ன? மற்றும் அதனுடைய நோக்கம் என்பன பற்றி குறிப்பிடுகின்றதே தவிர சமாதானக் கல்வியின் அவசியம் பற்றி விரிவாக ஆராயவில்லை. மேலும், Katz, N. (2016). எழுதிய *conflict Resolution and Peace Study*. எனும் ஆங்கில ஆய்வுக்கட்டுரையானது மோதல், முரண்பாடு, முரண்பாட்டுத்தீர்வு, சமாதாக் கல்வி என்பன தொடர்பான விளக்கத்தினை அளிக்கிறது. Neethling, T. (2006). எழுதிய *The importance and significance of Peace studies*

*with Special reference to South Africa's Poltical - Security role in Africa.* Saldanha எனும் ஆங்கில ஆய்வுக்கட்டுரையானது சமாதானக்கல்வி பற்றியும் ஆபிரிக்காவில் அதன்முக்கியத்துவம் பற்றியும் அங்குள்ள அரசியல் சூழலோடு ஒப்பிட்டு ஆராய்கிறது. எனினும் பெரும்பாலான ஆக்கங்களும் ஆய்வுக்கட்டுரைகளும் நாம் ஆய்வுக்குட்படுத்தியுள்ள தலைப்போடு தொடர்பாக ஆராயப்படாமல் விடப்பட்டுள்ளது. என்பது எமது இலக்கிய மீளாய்வுகளின் முடிவாக அமைந்தது. அதனை ஆய்வு இடைவெளியாகக் கொண்டு எமது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வுக் கண்டுபிடிப்புக்கள்**

சமாதானம் என்பது எளிமையானதொன்றாக மேலோட்டமாகப் பார்க்கும் போது தென்பட்டாலும், ஆழ்ந்து பார்க்கும் போது அது பல்வேறு மட்டங்களில் பரந்திருக்கும் ஒரு அர்த்தமுள்ள விடயமாகும். பியரெவெல்ஸ் (1987) சமாதானம் பற்றி நடைமுறையிலுள்ள சகல வரைவிலக்கணங்களையும் உள்ளடக்கக் கூடிய ஒரு மாதிரியைக் காட்டியுள்ளார். அவர் சமாதானத்தினை சமாதானம் பற்றிய விரிவு நோக்கு, சமாதானம் பற்றிய பொதுவான நோக்கு என இரு பிரிவுகளுக்குள் உள்ளடக்குகின்றார். சமாதானம் பற்றிய விரிவு நோக்கு என்பது சமாதான் என்பது ஒரு வெளிப் பிரபஞ்சம் மற்றும் உள்ளக பிரபஞ்சம் என்ற அடிப்படையில் விளக்குகின்றார். சமாதானம் பற்றிய வெளிப்பிரபஞ்சம் என்ற நோக்கின் கீழ் பல கருத்துக்கள் உண்டு. சமாதானம் கலாசாரம் ரீதியானது, மேலும் அரசியல் ரீதியானது, மற்றும் சமூக பொருளாதார ரீதியானது என இது விளக்குகின்றது. சமாதானம் என்பது யுத்தத்தினதும் இம்சையினதும் அழிவு, யுத்தத்தை நிறுத்தி நாடுகளை நிராயுதபணியாக்கும் போது இது உருவாகும் எனவும், மோதும் இரு சாராரையும் சமரசத்தின்பால் நெறிப்படுத்தும் போது தோன்றக் கூடியது எனவும் பரவலாக புரியப்படகின்றது. சமாதானக் கல்வி தொடர்பாக யுனெஸ்கோ, ஆக்கிரமிப்புக்கும் இம்சைக்கும் செலுத்தப்படும் மனிதனின் பலம் சமாதானத்தின் பலமாக மாற்றப்பட வேண்டும், இதனை கல்வி பெறுப்பேற்கப்படவேண்டும் என்கின்றது. அமைதி அல்லது சமாதானம் தொடர்பான துறைகளின் ஆரம்பம் 1940களின் பின் தோற்றம் பெற்றதோடு அதிலிருந்து இன்று வரை கணிசமாக வளர்ந்துள்ளதைக் காணலாம் (பேக், 2004).

சமாதானக் கல்வி என்பது நாம் சிந்திக்கின்ற தன்மையை மாற்றுவதோடு சமாதனம் நீதி போன்றவற்றுக்கான கற்கைகளை ஊக்குவிக்கின்ற ஒரு பங்குபற்றுதலுடனான நடைமுறையாகும். சமாதானத்தை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் மக்களுக்கு ஆற்றல் தேவை. அவர்களுக்குத் தேவையான சமாதானக் கல்வியானது மனித உரிமைகள், அபிவிருத்தி, ஜனநாயகம், சுற்றுச் சூழல் போன்ற கல்விகளையும் உள்ளடக்கும். மனிதப் பாதுகாப்பு, ஆயுதத் தவிர்ப்பு பற்றிய விடயங்கள், இணக்கப்பாடு, முரண்பாட்டுத் தவிர்ப்பு, தொடர்பூடகம் பற்றிய விமர்சன ரீதியான புரிந்துணர்வு, ஆண்,பெண் இருபாலர் கற்கைகள். ஆகிம்சை, சர்வதேச உறவுகள் போன்ற எல்லாம் சமாதானக் கல்வியின் அங்கங்களாகும் (பாலசூரிய, 1995). இதன் நோக்கம் சமாதானமாக வாழக் கூடிய மனித சமூகமொன்றை உருவாக்குவதாகும். இன்றைய உலகில் அன்றாடம் தலையெடுக்கும் இம்சைகளும், அழிவுகளும் அத்தகையதொரு கல்வியின் தேவையை எமக்கு வழியுறுத்துகின்றது. இவ்

இம்சை அலைகளில் எதிர்காலச் சமுதாயம் சிக்கிவிடாமல் காத்து அவர்களின் பலத்தை அழகியல் ரசனை, ஆக்கத்திறன், விஞ்ஞானம், விவேகம், ஆய்வு என்பவற்றைக் கொண்ட பரிபூரண வாழ்க்கையை நோக்கி செலுத்த நாம் உடனடியாக செயலில் இறங்க வேண்டும்.

மிக அண்மைக் கால ஆய்வுகளை நோக்கும் போது சமாதானமாக வாழ்வதற்கு முதலில் அதிஉயர் தனியாள் விருத்தி மட்டமொன்று அவசியம் எனத்தெரிகின்றது. அத்துடன் அதற்கான அறிவு, மனப்பாங்கு திறன், என்பன தேவை என்பதும் தெளிவாகின்றது. அதனை இயல்பாகவே பெற்றுக் கொள்ளலாம் என எண்ணி கல்வி நடவடிக்கைகளின் மட்டில் பராமுகமாக இருத்தல் ஆரோக்கியமற்றது. இப்போது சமயம் போன்ற பாடங்களினூடாகவும் சமாதானம் பற்றிய ஒரு விளக்கம் கொடுக்கப்படுகின்றது. எனினும், அவை பாரம்பரியமாக இருந்து வரக் கூடிய சமாதானம், சிறந்த வாழ்க்கை என்பவற்றை பழக்குவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட கற்பித்தலாகும். சமாதானம் பற்றிய எண்ணக்கருக்களை அறிமுகம் செய்வதால் மட்டும் பயனேற்படாது. நடைமுறை வாழ்வில் சமாதானமாக இருப்பதற்கு ஒருவருக்கு பல வகைப்பட்ட அறிவு, மனவெழுச்சி, தனிநபர்களுக்கிடையிலான ஆற்றல்கள் போன்றன தேவைப்படுகின்றன. சில மோதல்களை நிவர்த்தி செய்வதற்காக உபயோகப்படுத்தக் கூடிய நுட்ப முறைகளும் உண்டு. இவை பற்றிய பயிற்சியினையும் எண்ணக்கருவையும் கற்கையில் வழங்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகியுள்ளது.

21ஆம் நூற்றாண்டில் சமாதானத்துக்கும், நீதிக்குமான ஹேக் கோரிக்கை சமாதானக் கல்வியைப்பற்றி, ‘‘உலகப் பிரச்சினைகள் பற்றிய புரிந்துணர்வையும், முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றலையும், அகிம்சை ரீதியில் நீதிக்காக போராடும் ஆற்றலையும், சர்வதேச தராதரத்திற்கு அமைய மனித உரிமைகளுடனும், சமத்துவத்துடனும் வாழவும், கலாசார வேறுபாடுகளை ஏற்றுக் கொண்டு திருப்திப்படவும், புவியையும், இப்புவியில் வாழும் ஒவ்வொருவரையும் கௌரவிக்கவும் ஆரம்பித்துவிட்டால் சமாதான கலாசாரத்தை அடைந்து விடலாம். இத்தகைய புரிந்துணர்வையும் ஆற்றல்களையும் திட்டமிட்ட சமாதானக் கல்வியின் மூலமே அடைய முடியும்’’ எனக் குறிப்பிடுவதன் மூலம் சமாதானக் கல்வி எல்லாக் காலத்திற்கும் அவசியமானதொன்றாகும் என்பதை தெளிவுபடுத்துகின்றது. மோதல் என்ற எண்ணக்கரு சமாதானம் பற்றிய ஆய்வாளர்கள், சமூக விஞ்ஞானிகள் ஆகியோர்களது தொடர்தேர்ச்சியான ஆய்வுகளுக்கு மத்தியிலும் வியக்க முடியாத எண்ணக்கருவாகவே வளர்ந்து வந்துள்ளது. 1950களின் தசாப்தங்களிலும், 1960 களின் தசாப்தங்களிலும் சமாதானம் பற்றிய ஆய்வுகளுக்கு மோதல் கோட்பாடே மையமாக இருந்தது. 1980களின் தசாப்தத்தில் மோதல் கோட்பாட்டினை புதுப்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும் மோதல், சமாதானம் பற்றிய ஆய்வுகள் மக்கியவல்லியின் சித்தார்ந்தத்துடன் ஆரம்பமாகியதுடன் முதலாம், இரண்டாம் மகாயுத்தங்களும் அதன் பின்னரான வியட்நாம் யுத்தமும் மோதல், சமாதானம் பற்றிய ஆய்வுகளுக்குப் பெரும் பங்காற்றியிருந்தன எனலாம்.

சோரக்கின் எனும் ஆரஸ்திரிய சமூகவியலாளர் வாழ்ந்த காலம் சார் மன்னனின் கொடுங்கோண்மை ஆட்சி நிலவிய காலமாகும். ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர் 1922ஆம் ஆண்டில் சொரக்கின் நாடு கடத்தப்பட்டார். இதனால் தனக்குரிய வாழ்விடமாக ஐக்கிய

அமேரிக்காவை தேர்ந்தெடுத்துக் கொண்டதுடன், அங்கு சமூகவியல் துறையில் பேராசிரியர் பதவியையும் பெற்றுக் கொண்டார். ஐக்கிய அமேரிக்காவில் வாழ்ந்த காலத்தில் ஏறக்குறைய 30ற்கும் மேற்பட்ட நூல்களை எழுதி இருந்தார். இவர் எழுதிய நூல்களுள் 1925ஆம் ஆண்டு வெளிவந்த புரட்சியின் சமூகவியல் (The sociological of Revolution) என்ற நூலிலும் 1928 ஆம் ஆண்டு வெளிவந்த சமகால சமூகவியல் கோட்பாடுகள் (The ContempThe Contemporery Sociological Theories) என்ற நூலிலும் சமூகவியலுடன் யுத்தத்தினைத் தொடர்புபடுத்தி எழுதியிருந்தார். இவர் யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களை சமூகம் ஒரு கால கட்டத்திலிருந்து இன்னொரு கால கட்டத்திற்கு மாறும் போது உள்நாட்டில் குழப்பநிலை ஏற்படுகிறது. இதனால் குழப்பமடைய வேறுபட்ட பல சமநிலைகள் ஏற்படுகின்றன. இதுவே யுத்தம் உச்சநிலையை அடைவதற்குக் காரணமாகும் எனக் கூறுகின்றார்.

சமகாலத்தில் அறிஞர்கள் மற்றும் உலகிலுள்ள பல்வேறு மூன்றாம் நிலை நிறுவனங்கள் அர்களின் கல்வித்திறன்களை பயன்படுத்தி போர் மற்றும் மோதல் நிகழ்வதற்கான மாற்றுவழிகள் பற்றி மாணவர்களுக்கு கற்பிக்கின்றனர். அத்துடன் பாடத்திட்டத்தில் சமாதானக் கற்கை அல்லது அது தொடர்பான ஆய்வுகள் காணப்பட வேண்டும் என வாதாடப்படுகின்றது. இது சர்வதேச ரீதியான அமைதி மற்றும் பாதுகாப்பை தேடுவதற்காக, எவ்வாறு மோதலைப் புரிந்து கொள்வது, எவ்வாறு அதனை கையாள்வது, இம் மோதல் முரண்பாட்டை எவ்வாறு குறைக்கலாம் போன்ற பல கேள்விகளுக்கான பதில்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றினை நடைமுறைப்படுத்துவதற்கு இலக்கிய ரீதியான அறிவார்ந்த ஆராய்ச்சிகளும், அமைதியை உருவாக்கக் கூடிய பயிற்சிகளும் காலத்தின் கட்டாயமாகும். இதன் அவசியம் குறித்து மேலும் நோக்குகையில்,

- ✓ ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு சமாதானக் கல்வி பாரியபங்காற்றுகின்றது.

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில் அங்கு சமாதானம் நிலவ வேண்டும். உதாரணமாக : ஆபிரிக்கா ஒரு கண்டமாக அறியப்படுவதோடு அது பெரும்பாலான உள்ளூர் ஆயுத மோதலில் மூழ்கியுள்ளது. இயற்கையாகவே வன்முறை மற்றும் மோதலைத் தரும் மாநிலங்களாக உள்ளது. விரக்தி, வறுமை, நோய், அகதிகள் பிரச்சிணை, மற்றும் உள்நாட்டுக் குழப்பகாரர்கள் போன்றன மோதலுக்கு வழிவகுத்தன. இதனால் பொருளாதார ஸ்தீரத் தன்மை ஏற்பட்டு ஆபிரிக்கா சர்வதேச சமூக மட்டத்தில் ஓரங்கட்டப்படும் நிலை தோன்றியுள்ளது. இவ்வாறான நிலை மாறி ஆபிரிக்காக் கண்டத்தின் முன்னேற்றத்தை பதிவு செய்வதற்கு சமூகத்தில் உள்ள மோதல்களை நிவர்த்தி செய்து, சமாதானத்தை மேம்படுத்தி பொருளாதார அடித்தளத்தை உறுதி செய்வது அடிப்படையாகக் காணப்படுகின்றது. எனவே இன்றைய இங்குள்ள சமூக இளைஞர்களுக்கு சமாதானக்கு கல்வி என்பது இன்றியமையாதது ஆகும்.

மார்ச் - 2006ல், போர்ட்செ.ஃப்ரூமில் "அமேரிக்காவின் குரல் - அமைதிக்கான குரல் (Voice of Africa – Voice of Peace)" எனும் சர்வதேச மாநாட்டில் பங்பற்றிய இத்துறைசார் நிபுனர் பின்வருமாறு கூறினார் (NWU,2006), 'ஆபிரிக்கக் கண்டமானது ஏராளமான அரசியல்

பொருளாதார மற்றும் சமூகத்தால் பாதிக்கப்பட்டுள்ளதோடு உள்நாட்டுப் போர் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான பிரச்சினைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இம் மோதல்களுக்கு நேரடிக் காரணம் 'பொருளாதாரக் குழப்பமாகும்''. மாநாட்டின் முடிவில் பின்வருமாறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டதோடு அதில் பங்கு பற்றியவர்களால் கையொப்பமிடப்பட்டது (NWU, 2006).

- எந்தவாரு வடிவத்திலுமுள்ள வன்முறை கண்டனம் செய்யப்படுகின்றது.
- மதத்தினை பொருட்படுத்தாமல் சமாதானத்தை மேம்படுத்துவதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளல்.
- வன்முறைகளுக்கு ஒரு சில காரணங்கள் மட்டும் அல்ல (பொருளாதார, அரசியல்) வன்முறை என்பது சிக்கலான பிரச்சினை ஆகும். இதனால் கல்வியாளர்கள் அதன் பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டு அணுக வேண்டும்.
- கல்வி அணுகுமுறையினால் வன்முறையினை முழுமையாக குறைக்க முடியவிட்டாலும் எல்லா சிக்கலையும் தீர்ப்பதற்கு அது மதிப்புமிக்க திறன்களை அது வழங்கும்.
- அமைதி அல்லது சமாதானம் தொடர்பான ஆய்வுகள் பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

சமாதான ஆய்வுகள் அல்லது சமாதானக் கல்வியினுடைய பிரதான நோக்கம் என்னவெனில் ''ஒரு தனி மனிதன் அல்லது மனிதக் குழு இன்னொருவருக்கு ஏற்படுத்தக் கூடிய அழிவுகரமான நிகழ்வுகள் மோதல்கள் ஏன் நிகழ்கின்றன என்பதனை அறிவதோடு, அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்பதாகும் (wallersteen, 2002). இன்று நடைமுறையில் வடஅமேரிக்கா, ஐரோப்பிய மற்றும் ஆசிய (குறிப்பாக ஜப்பான்) போன்ற நாடுகளில் சமாதானக் கற்கைகளை நடாத்துதல் ஆய்வுகளை மேற் கொள்ளுதல் போன்றவற்றிற்கு பல்வேறு ஆய்வு மையங்கள் நிறுவப்பட்டு தீவிரமாக ஊக்குவிக்கவும் படுகின்றது.

''சர்வதேச அமைதிக்கான சமாதான ஆராய்ச்சி சங்கம் - International Peace Research Organization'' ஆனது சுமார் 90 நாடுகளில் 1300ற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு, 200ற்கும் மேற்பட்ட ஏனைய நிறுவனங்களோடும் தொடர்பு கொண்டுள்ளது. அதேபோன்று இன்று, IPRA ஐந்து அமைப்புகளைக் கொண்டுள்ளது.

1. ஆசிய – பசுபிக் அமைதி ஆராய்ச்சி சங்கம்.
   Asia-Pacific Peace Research Association
2. ஆபிரிக்க – சமாதான ஆராய்ச்சி மற்றும் கல்விச் சங்கம்.
   The Africa Peace Research Association.
3. ஐரோப்பிய அமைதி ஆராய்ச்சி சங்கம்
   The European Peace Research Association
4. லத்தீன் அமேரிக்காவின் அமைதி ஆராய்ச்சி சங்கம்

The Latin American Peace Research Association

5. வடஅமேரிக்காவின் நீதி மற்றும் சமாதானத்திற்கான சங்கம்

இவ்வாறான முன்னெடுப்புகள் ஒவ்வொரு கண்டங்களிலும் காணப்படுவதோடு, 90ற்கும் மேற்பட்ட நாடுகளில் காணப்படுவதோடு மட்டுமல்லாது ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பட்டு தமது சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பது சமாதானக் கல்வி இன்றைய காலத்திற்கும் எந்தளவு தூரம் முக்கியமானது என்பது புலனாகிறது.

- இன்றைய அரசியலிற்கும் எதிர்கால நிலையான அரசியலிற்கும் சமாதானக் கல்வி தேவையானது.

ஒரு நாட்டினுடைய அபிவிருத்திக்கு அரசியலாளர்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது எனலாம். இன்றைய உலகில் நடைபெறும் பெறும்பாலான நாடுகளுக்குள்ளான முரண்பாடுகளுக்கும் நாடுகளுக்கு வெளியேயான முரண்பாடுகளுக்கும் அரசியல் வாதிகளே காரணமாக இருக்கின்றனர். உதாரணமாக இந்திய, இலங்கை மற்றும் அமேரிக்கா போன்ற நாடுகளைக் குறிப்பிட முடியும். எனவே இன்றை அரசியல் தலைவர்கள் உட்பட எதிர்கால அரசியல் தலைவர்கள் சமாதானத்தை உருவாக்கக் கூடிய ஒருவாக உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சிறந்த ஆளுமைகள் கொண்ட தலைவர்கள் உருவாக்கப்பட வேண்டும் எனில் இன்றைய சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் சிறந்த மனப்பாங்கு, திறன் கொண்ட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அதே போன்று தற்காலத்தில் அரசியலில் அங்கீகாரம் பெற வேண்டும் எனில் அவர் சமாதானக் கல்வி தொடர்பான கற்கைநெறிகளைப் பின்பற்றி சேவைகள் புரிந்து இருக்க வேண்டும் என்ற ஒரு தகைமை முன்வைக்கப்பட வேண்டும். இவ்வாறக சமாதானக் கல்வி புகட்டப்பட்ட ஒரு சமூகம் அரசியல் தலைவராக இருக்கும் போதும், எதிர்காலதத் தலைவராக தெரிவாகும் போதும் அந்நாடும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளும் அதனால் பிரயோசணமடையும். எனவே சமாதானக் கல்வி என்பது மிக முக்கியமானதாகும்.

- இன, மத மோதல் குறைப்பதற்கும் பல்லின சமுதாய ஒற்றுமைக்கும் சமாதானக் கல்வி அவசியப்படுகின்றது.

2ஆம் உலக மகா யுத்தத்தைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அதனைத் தொடர்ந்து உலகில் சமாதானத்தையும் தாண்டி, இன, மத முரண்பாடுகள் அதிகரித்துள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவற்றுக்குக் காரணம் அன்றைய சூழலில் சமாதானத்திற்கென ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதே தவிர சமாதானத்தினுடைய அடிப்படை பொதுமக்கள் வரை சென்றடைய வேண்டும் என்றதொரு நோக்கம் காணப்படவில்லை. இதனால் இன்று பல்லினமாக வாழக்கூடிய இலங்கை, இந்திய, பர்மா, மியன்மார் போன்ற நாடுகளில் பல்வேறு இன முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளது. இவற்றை முழுமையாக தவிர்க்க முடியாவிட்டாலும், அழிவுகளை குறைப்பதற்கு பொது மக்கள் மத்தியிலும் சமாதானக் கல்வி தொடர்பான விடயங்கள்


ISBN 978-624-5736-14-0

சென்றடைய வேண்டும். அவ்வாறு சென்றால் மாத்திரமே இவ்வாறான முரண்பாடுகளைக் குறைக்க முடியும்.

- குடும்பங்களின் ஒற்றுமைக்கு இது பெரும் பங்காற்றுகின்றது.

ஆரம்ப காலங்களோடு ஒப்பிடும் போது, இன்றைய நவ நாகரீக உலகில வாழும் மக்கள் கூட்டுக்குடும்பங்களை விட கருக்குடும்பங்களையே அதிகம் விரும்புகின்றனர். அதே போன்று அதிகமான குடும்பங்கள் கருக்குடும்பமாகவே காணப்படுகின்றது. இவ்வாறு காணப்பட்டாலும், இவ்வாறான குடும்பங்களிலேயே பெற்றோர் பிள்ளைகளிடையே ஒற்றுமையின்மை, கணவன் மனைவியினிடையே ஒற்றுமையின்மை, அண்டை வீட்டாரோடு ஒற்றுமையின்மை என்பன அதிகரித்துள்ளது. இதனால் அதிகமான விவாகரத்துகளும் பதிவாகியுள்ளது என அண்மைக்கால பல்வேறு ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இவற்றை குறைக்க வேண்டுமெனில் முரண்பாடு என்றால் என்ன? சமாதானம் என்றால் என்ன? குடும்பங்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை எவ்வாறு கையால்வது தொடர்பான விடயங்கள் கற்றுக் கொள்வது அவசியமாகிறது. எனவே சமாதானக் கல்வி அவசியமாகிறது.

- தனிமனித உளப்பிரச்சினைகளின் தீர்விற்கு சமாதானக் கல்வி உதவுகின்றது.

மனிதன் என்பவன் சமூகப் பிராணி என்ற வகையில், மனிதன் கி.முற்பட்ட காலத்திலிருந்தே அவன் சமூகத்தோடு நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ளான். இதற்கு இன்றைய 21ஆம் நூற்றாண்டு விதிவிலக்கானது அல்ல. இவ்வாறு அவன் சமூகத்தோடு தொடர்பு கொள்ளும் போது, சமூகத்தில் நடைபெறும் பல்வேறு பயனளிக்கும் விடயங்களோடு வாழ்வதோடு முரண்பாடுகளோடும் வாழ்கின்றான். இதனால் எது சரி, எது பிழை என்பதை அடையாளம் காணத்தெரியாமல், அல்லது அச்சூழலை சமாளிக்கத் தெரியாமல் அவன் உள ரீதியாக பாதிப்படைகிறான். இவ்வாறான உளப்பாதிப்புகளால் அவன் தன்னையும் துன்பப்படுத்திக் கொண்டு தன்னோடு இருக்கக் கூடிய சக மனிதனையும் துன்பத்திற்கு உள்ளாக்குகின்றான்.

இதனைத் தவிர்ப்பதற்கு பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் பாவனையை நாடுகின்றனர். எனினும் இப்போதைப்பொருள் உளப்பிரச்சினையை அதிகப்படுத்துகின்றதே தவிர குறைப்பதாக இல்லை. இவ்வாறான உள ரீதியான பாதிப்புகளைக் குறைக்க வேண்டுமெனில், தனி மனிதன் ஒவ்வொருவரும் முரண்பாடு, சமாதானம், அதனை முகாமைத்துவம் செய்யும் விதம் என்பன தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வது மாத்திரமன்றி அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான பயிற்சிகளின் விளைவுகளை சிறந்த முறையில் அடைய வேண்டும் எனில் சமாதனக் கல்வி அவசியப்படுகின்றது.

- சமாதானக் கலாசாரம் ஒன்றை உருவாக்குவதற்கு இது அவசியப்படுகின்றது.

சமாதானக் கலாசாரக் கோட்பாடு என்பது சமாதானத்தினதும் அகிம்சையினதும் விழுமியங்களின் அங்கீகாரத்தின் மீதும் சர்வதேச மனித உரிமைச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ள மனித உரிமைகள், மனிதாபிமான உரிமைகள், சுதந்திரம் என்பவை


ISBN 978-624-5736-14-0

ஒவ்வொரு பிரஜையும் பாகுபாடு இல்லாமல் அனுபவிக்க் கூடிய உத்தரவாதத்தின் மீது கட்டியெலுப்பக் கூடிய ஒன்றாகும்.

முரண்பாடுகளோ அல்லது வன்முறைகளோ அற்ற சூழல் சமாதானக் கலாசாரத்தைக் கொண்டதாக கருத முடியாது. சமூகத்தில் ஏற்படுகின்ற முரண்பாடுகள் எல்லாவற்றையும் அகிம்சை வழிகளில் இணக்கப்பாட்டுடன் தீர்த்துக் கொள்ளும் நம்பிக்கையையும், கடமைப்பாட்டையும் உத்தரவாதம் செய்வதோடு முரண்பாடுகளின் தீர்விற்கு வன்முறை பிரயோகத்தைத் தவிர்கக் கூடிய சூழலே சமாதானக் கலாசாரம் எனப்படும்

சமாதானக் கலாசாரத்திற்கான செயற்திட்டம் பற்றிய ஐ.நா. வின் பிரகடனத்துடன் (A/RES/52/13) முரண்பாடுகளோ அல்லது வன்முறைகளோ அற்ற சூழல் சமாதானக் கலாசாரத்தைக் கொண்டதாக கருத முடியாது) தொடர்பு பட்டதும், உலகெங்கிலுமுள்ள தனிநபர்கள் குழுக்கள் அமைப்புகள் நிறுவனங்களின் செயற்பாடுகளின் ஆர்வத்தினை ஏற்படுத்துவதே சமதானக் கலாசாரத்தின் கோட்பாடாகும். சமாதானக் கலாசாரம் தொடர்பான உலக இயக்கத்தைக் கட்டியெழுப்பவதற்கு ஐ.நா. குறிப்பிடும் முதலாவது விடயம் ''கல்வியின் மூலம் சமாதானக் கலாசாரத்தைக் கொண்டுவரல்'' என்பதாகும்.

- இன்றைய புரிந்துணர்வின்மை, போட்டி மற்றும் பொறாமைச் சூழலில் இருந்து மாணவர் சமூதாயத்தை காப்பதற்கு சமாதானக் கல்வியை கற்றலுடன் இணைக்க வேண்டும்.

இன்றை இருபத்தியொராம் நூற்றாண்டு என்பது போட்டிச்மூழல் நிறைந்ததொன்றாக காணப்படுகின்றது. இதனால் பல்வேறு முரண்பாடுகள், மனக் கசப்புகள் நிகழ்வது சாதாரணமான ஒன்றாகவே மாறியுள்ளது. இதன் தாக்கம் பாடசாலை மட்டத்தில் மாணவர்களையும் ஆக்கிமைித்து தான் தான் எல்லாவற்றிலும் முன்னிலையிலும் காணப்பட வேண்டும் என்ற சிந்தனையை வளரவிட்டுள்ளது. இதனால் மாணவர்கள் மத்தியில் புரிந்துணர்வு என்பதும் குறைந்து கொண்டு செல்கின்றது. இவ்வாரான சூழலில் இப்போட்டிச் சூழலை ஆரோக்கியமான முறையில் தவிர்ப்பதற்கு பாடசாலைகளிலிருந்தே மாணவர்களுக்கு, சமாதானக் கல்வி வழங்குவது அவசியமாகிறது. இதனால் அவர்கள் வாழ்க்கையினுடைய யதார்த்த நிலையோடு வாழ்வதற்கு அது வழிவகுக்கும்.

- மோதல், முரண்பாடு, என்பன தொடர்பான தெளிவினைப் பெறுவதற்கு இது அவசியம்.

இன்றைய மாணவர்கள், ஏதாவது மனக்கசப்பான நிலை ஏற்படுகின்றபோது முரண்பாடு, வன்முறை பற்றி ஆக்ரோஷமாக பேசுமளவிற்கு மோதல், முரண்பாடு, முரண்பாட்டுத் தீர்வு, அதனை எவ்வாறு கைளயாள்வது என்பது பற்றி கலந்துறையாடுவதிலோ அல்லது நடைமுறைப்படுத்துவதிலொ பூரண தெளிவு இல்லாமலே இருக்கின்றனர். இதற்குக் காரணம் மாணவர்கள் மத்தியில் பூரண அறிவும், அனுபவமும் மாணவர்களுக்கு வழங்கப்படாததாகும். இதில் தெளிவு பெற்று நடைமுறையில் கொண்டுவருவது என்பது எழிமையான விடயமல்ல, இதனை நடைமுறையில் கொண்டுவந்து புரிந்து கொள்வதற்கு முறையான பயிற்சி அவசியமாகிறது. அவ்வாறான பயிற்சியை மாணவர்களுக்கு வெறுமனே வாய்வார்த்தை

மூலமாக வழங்குவதால் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டு செயற்படுத்தப்போவதில்லை. எனவே மாணவர்களுக்கு பயிற்சியுடன் கூடிய சமாதானக் கல்வியை வழங்க வேண்டும்.

- சமூகத்தில் இடம்பெறும் பிளவுகள் வளர விடாமல் இருப்பதற்கு சமாதானக் கல்வி தேவையாக உள்ளது.

பிளவுகள், மோதல்கள், பிரச்சினைகள், சச்சரவுகள் போன்றன எல்லா சமூகங்களுக்கு மத்தியிலும் உண்டாவது இயல்பு. இவ்வாறான சமூகங்களுக்கிடையிலான சச்சரவுகளினால் பல நன்மையான விடயங்களும் நடைபெற்றுள்ளன. உதாரணமாக பிரான்ஸியப் பரட்சியினால் மன்னராட்சி ஒழிக்கப்பட்டு மக்களாட்சி ஆரம்பிக்கப்பட்டதனை குறிப்பிட முடியும்.

இவ்வாறான பிளவுகள் பெரிதாகி பாரிய எதிர்மறையான விளைவுகளை உருவாக்குமளவு வளர விடுவதும், அடியோடு சமயோசிதமாக தணித்து விடுவதும் அந்தந்தந்த சமூக புத்திஜீவிகளின் முனைப்பிலேயெ உள்ளது. இவ்வாறான முடிவுகளை எடுப்பதற்கும், அதிகளலவான புத்திஜீவிகளை உருவாக்குவதற்கும் சமாதானக் கல்வி மிகச் சரியான பாதையினைக் காட்டவல்லது எனில் மிகையில்லை.

- உலகலாவிய ரீதியிலும் இலங்கையிலும் பல்வேறு இனங்கள் பிரிவுகள் இது சம்பந்தமான அறிவைப் பெறுவதற்கு அவசியமான ஒன்றாக சமாதானக் கல்வி காணப்படுகின்றது.

நாம் மேலேக் கூறியது போன்று இலங்கை உட்பட, பல்லின மக்கள் வாழும் நாடுகளில் பல்வேறு இனப்பிரிவுகள் காணப்படுகின்றனர். அதிகமான பொது மக்கள் உட்பட, மாணவர்கள் வரை இவ்வாறான பிரிவகள் பற்றிய தெளிவின்மை காணப்படுகின்றது. இப்பிரிவுகள், இப்பிரிவுகளின் தோற்றம், அவற்றின் நோக்கங்கள் என்பன பற்றி அறிந்து கொள்வது கட்டாயமானதாகும். இவற்றை சாதாரணமான முறையில் விளக்க முற்படும் போது அது ஒரு பிரிவின் சார்பாக பேசுகிறது என்ற ஒரு தப்பான கண்ணோட்டம் உருவாவது இயல்பானதாகும். எனினும் இவற்றை அரச அங்கீகாரம் பெற்ற சமாதானக் கல்வியினூடாக வழங்கும் போது அது சிறந்த முறையில் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

- இணக்க மையங்கள் புதிதாக அமைப்பதற்கும் ஏற்கனவே காணப்படும் இணக்க மையங்களை புதுப்பிப்பதற்கும், பயிற்சிகளை வழங்குவதற்கும் அவசியமானதாக காணப்படுகின்றது.

ஆரம்பகாலம் உட்பட, இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை பல்வேறு இணக்க மையங்கள் தோன்றியுள்ளது. அதில் சில வெற்றிகரமாக நடைபோட்டுக் கொண்டிருக்கும் அதே வேலை, இன்னும் சில செயலற்றும் காணப்படுகின்றது. காலத்திற்கு ஏற்ப இணக்க மையங்களின் செயற்திட்டங்களும் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது.

இன்றைய இளைஞர்களுக்கு சரியான முறையில் சமாதானக் கல்வியை பயிற்றுவிப்பதனூடாக, அவர்கள் இன்றைய காலத்திற்கு ஏற்ற வகையிலான இணக்க மையங்களை ஸ்தாபிப்பார்கள். இவை புது சிந்தனைகள் கொண்டவையாக காணப்படுவதோடு, எதிர்கால இணக்க மையங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாக அமையும்.

**முடிவுரை**

சமாதானம் என்பது எவ்வாறு எல்லா சமூகங்களுக்கும் மிக அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றதோ அதே போன்று பாடசாலை மட்டங்களில், கல்வியியல் கல்லூரிகளில், உயர் கல்வி நிறுவனங்களில் என கற்றல், கற்பித்தலோடு தொடர்பான அனைத்து அரச சார், அரச சாரா நிறுவனங்களிலும் இதனை பாடவிதானங்களுக்குட்படுத்தி கற்பிக்க வேண்டும் என்பது இன்று காலத்தால் உணர்த்தப்பட்டதும், அனைத்து மட்ட மக்களுக்கும் தேவையானதுமான ஒன்றாக மாறியுள்ளது. இதனை இவ் ஆய்வு தெளிவாக ஆராய்ந்துள்ளது. இவை பல மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் போது மாணவர் சமூதாயத்திலிருந்து கல்விமான்கள் வரை இது தொடர்பான புரிந்துணர்வோடு செயலாற்றுகையில் சமாதானம் என்பது எங்கும் துளிர் விட்டெழும்பும்.

**உசாத்துணைகள்**

Baalasooriya, A. (1995). *சமாதானக் கல்வி கற்றற் செயற்பாடுகள் (இடைநிலை வகுப்பு மாணவர்களுக்காக).* Maharagama: கல்வி முகாமைத்துவ அபிவிருத்தித்துறை தேசிய கல்வி நிறுவகம்.

Husain, A. (2020, May 05). *VTN NEWS*. Retrieved February 01, 2021, from http;//www.vtnnews.com

Jothiyalingam, S. (n.d.). *யுத்தக் கலாசாரத்திலிருந்து சமாதானக் கலாசாரத்தை நோக்கி.* கொழும்பு - 06: இலங்கை தேசிய சமாதானப் பேரவை.

Katz, N. (2016, November 03). *conflict Resolution and Peace Study*. Retrieved from Researchgate: https://www.researchgate.net/publication/249666048.

Kirishnamohan, T. (2014, September 19). Retrieved from tkm.Polticalmanac: http;//www.tkm.polticalmanac.com

Neethling, T. (2006). *The importance and significance of Peace studies with Special reference to South Africa's Poltical - Security role in Africa.* Saldanha: Department of Political Science. Retrieved february 01, 2021, from http;//www.Reseachgate.com

Nirekka, D. S. (2014). *News.lk*. Retrieved from The Goverment Official News Portal: http;//www.tamil.news.lk

Veluppillai, K. (2012). *முரண்பாடும் சமாதானமும் ஓர் அறிமுகம்.* சென்னை: Kumaran Puththaha illam.